# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.**13741**/விசாரணை/2009

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 22.09.2009.</u>**

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன், எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி., மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு K.முருகேசன், த/பெ.P.குப்புசாமி, உனைப்பள்ளத்தூர் கிராமம் & அஞ்சல், (ராமர் கோவில் அருகில்) ஆனைக்கட்டு (வழி), வேலூர் தாலுகா & மாவட்டம் – 632 101. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர், அரசு தேர்வுகள் இயக்குநரகம், கல்லூரிச் சாலை, சென்னை – 600 006. |

*****

மனுதாரர் திரு K.முருகேசன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திருமதி D.உமா, இணை இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்குநரகம், கல்லூரிச் சாலை, சென்னை இன்று (22.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 04.10.2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், மண்டல அரசுத் தேர்வுத் துறை, துணை இயக்குநர் அலுவலகம், வேலூர் அவர்களிடம் குறிப்பிட்ட ஒருவரின் மதிப்பெண் பட்டியலைக் கேட்டு மனுச் செய்துள்ளார். மனுதாரரின் மனு 06.10.2008 அன்று இயக்குநர், அரசுத் தேர்வுகள், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 21.10.2008

அன்று மனுதாரர் குறிப்பிடுகின்ற தகவல்கள் மூன்றாம் நபர் குறித்தது, எனவே என்ன காரணத்திற்காகத் தகவல் கேட்கிறார் என்று அரசுத் தேர்வுகள் இயக்ககம் கடிதம் அனுப்பியுள்ளது. இந்நிலையில் 20.03.2009 அன்று துறைக்கு மேல் முறையீடும் 17.06.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (22.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் கேட்ட குறிப்பிட்ட நபரின் மதிப்பெண் சான்றிதழின் நகல் விசாரணையின் போது மனுதாரருக்கு அளிக்கப்பட்டதால் வழக்கு இத்துடன் முடிவடைகின்றது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 23.09.2009**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>வழக்கு எண்.13741/விசாரணை/2009</u>

பொதுத் தகவல் அலுவலர்,
அரசு தேர்வுகள் இயக்குநரகம்,
கல்லூரிச் சாலை,
சென்னை – 600 006.

திரு K.முருகேசன்,
த/பெ.P.குப்புசாமி,
உனைப்பள்ளத்தூர் கிராமம் & அஞ்சல்,
(ராமர் கோவில் அருகில்)
ஆனைக்கட்டு (வழி),
வேலூர் தாலுகா & மாவட்டம் – 632 101.

*"ptl"*